ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2161/35 - 2020 පෙබරවාරි මස 07 වැනි සිකුරාදා - 2020.02.07

*2161/35 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி.-104/ 44*(v).

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

*(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 6அ மற்றும் 19அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 115அ என்னும் பிரிவின் கீழ் நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால த சில்வா,
நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 29.*

ஒழுங்குவிதிகள்

*இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதிய 2018/ 10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புக்கள் (வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள்) பற்றிய ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

1A - PG 4866 — 517 (2020/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) நான்காம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியில், "நம்பிக்கைப் பொறுப்பின் மூலச் சாதனத்துடன் சேர்த்து, பதிவுக்காக அனுப்பி வைத்தல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நம்பிக்கைப் பொறுப்பின் மூலச் சாதனத்துடன் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) நான்காம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்னர், அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 4அ என்றவாறாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"4அ. (1) நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பொன்று தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரினால் அளிக்கப்பட்ட அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட தகவல்களைப் பெற்றதன் மேல் காணிப் பதிவாளர், நம்பிக்கைப் பொறுப்பாதனம் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பின் மாவட்டச் செயலாளருக்கு அத்தகைய தகவல்களைப் பின்வரும் நோக்கங்களுக்காக அளித்தல் வேண்டும் -

(அ) அத்தகைய தகவல்களைச் சரிபார்த்தல் ; அத்துடன்

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பின் உருவாக்கமானது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு எதனையும் மீறுகின்றதா என்பதை நிச்சயித்தல்.

(2) மாவட்டச் செயலாளர், அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட தகவல்களை நம்பிக்கைப் பொறுப்பாதனம் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ, அந்த இடப்பரப்பின் கிராம அலுவலரது உதவியுடன் இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளருக்கூடாக சரிபார்க்கப்படுவதனையும் நிச்சயிக்கப்படுவதனையும் செய்வித்தல் வேண்டும்.

(3) பிரதேச செயலாளர், (1) ஆம் உப ஒழுங்குவிதியின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறாக அத்தகைய சோதனைகள், பரிசோதனைகள் அல்லது விசாரணைகளை நடாத்துதல் வேண்டுமென்பதுடன், இயைபான வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பு மீது மாவட்டச் செயலாளரின் அவதானிப்புக்களைச் செய்வதற்காக, அவரது அறிக்கையை, மாவட்டச் செயலாளருக்கு அளித்தலும் வேண்டும்.

(4) மூன்றாம் உப ஒழுங்குவிதியின் கீழான அறிக்கையைப் பெற்றதன் மேல் மாவட்டச் செயலாளர், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பிலான அவரது அவதானிப்புக்களைக் காணிப் பதிவாளருக்கு அளித்தல் வேண்டும் ; காணி பதிவாளர், அத்தகைய அவதானிப்புக்களைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(5) பதிவாளர் தலைமையதிபதி, (4) ஆம் உப ஒழுங்குவிதியின் கீழ் அவரினால் பெறப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு-

(அ) அத்தகைய வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பு சட்டமுறையாகப் பதிவு செய்யப்படலாமெனத் திருப்தியுறுகின்றவிடத்து, அவர் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பைப் பதிவு செய்வதற்குக் காணிப் பதிவாளரைப் பணித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் ஏதேனும் அம்சம் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு எதனையும் மீறுகின்றதெனச் சந்தேகிப்பதற்குப் போதிய ஏதுக்கள் உள்ளனவெனத் திருப்தியுறுகின்றவிடத்து, அவர் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பிலான எல்லாத் தகவல்களையும் அவசியமான நடவடிக்கைக்காக இயைபான சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(3) ஐந்தாம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியில் "நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் பெறப்பட்ட வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒழுங்குவிதி 4அ என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கள்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

2-438

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.